


திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட் பகுதியில் 400 ஏக்கர் பரப்பளவில் பாரத் சாரணர், சாரணியர் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா (Jamboree) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது. இந்த விழாவினை முன்னிட்டு பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து மருத்துவத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ வசதிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.01.2025) இவ்விழா தொடக்கத்தின் முன்னதாக அப்பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.குமாரவேல், இணை இயக்குநர் மரு.கோபிநாத், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஹேமசந்த் காந்தி, மாவட்ட சுகாதார அலுவலர் (காசநோய்) மரு.சாவித்ரி மற்றும் மருத்துவக்குழுவினர் உடனிருந்தனர்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் செம்போடை எம்.ஜி.ஆர். மெட்ரிக் மழலையர்பள்ளியில் நாகை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் நடைபெற்ற வரைபட போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். உடன் மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், வேதாரண்யம் நகரச் கழகச் செயலாளர் மா.மீ.புகழேந்தி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், மகா.குமார், தகவல் தொழில் நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

**சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபத்தினை முதல்வர் திறந்து வைத்தது தைலாபுரத்துக்குத் தலைவலியை ஏற்படுத்தி விட்டது!**

**ராமதாஸ் எழுதிய அ.தி.மு.க. வரலாற்றின் கதையைப் படித்துவிட்டு அன்புமணி, 'பா.ம.க. குழப்பத்தின் கதை'யை எழுதலாம்!**

# வன்னியர்களுக்கு தி.மு.க. செய்தது என்ன? பா.ம.க.வின் துரோகம் என்ன?

## சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் விளக்கங்களுடன் அன்புமணி ராமதாசுக்கு பதிலடி!

சென்னை,ஜன.30 -

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாசுக்கு அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் விடுத்துள்ள பதிலடி அறிக்கை வருமாறு :-

**இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விழுப்புரத்தில் திறந்து வைத்தது தைலாபுரத்தில் தலைவலியை ஏற்படுத்தி விட்டது போல! பா.ம.க. தலைவர் அன்புமணி புலம்பி தள்ளியிருக்கிறார்.**

"வன்னியர்களுக்கு அதிக துரோகம் செய்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்தான்" எனச் சொல்லியிருக்கிறார் அன்புமணி. பத்தாண்டுகள் ஆட்சியில் இருந்த அதி.மு.க. தன்னுடைய தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட இலவச செல்போன், WiFi, மோனோ ரயில் என பலவாக்குறுதிகளை நிறைவேற்றாமல் வாக்காளர்களுக்குப் பட்டை நாமம் சாத்தினார்கள். ஆனால், அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த தளபதி அவர்கள் "தி.மு.க. ஆட்சி அமைந்ததும் இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்" என 2019 அக்டோபர் 7-ம் தேதி விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் வாக்குறுதி கொடுத்தார். ஆட்சிக்கு வந்து அந்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது எல்லாம் தமிழ்நாட்டு அரசியலில் இதுவரை நடக்காத நிகழ்வு.

கல்வி, வேலைவாய்ப்பில் தனி இட ஒதுக்கீடு கேட்டு, 1987-ல் வன்னியர்கள் நடத்திய போராட்டத்தைத் துப்பாக்கி முனையில் ஒடுக்கியது அன்றைய அ.தி.மு.க ஆட்சி. வன்னியர் சமுதாயத்திற்குப் பாடுபட்டு வரும் தி.மு.க., 1989-ல் ஆட்சிக்கு வந்த 43-வது நாளில் அதாவது 28.3.1989 அன்று வன்னியச் சமுதாயத்தினர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு 20 சதவீத தனி ஒதுக்கீடு அளித்து அரசாணை வெளியிட்டது. அதோடு நிற்கவில்லை. வன்னியர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தார் முதல்வர் கலைஞர். 1987 இட ஒதுக்கீடு போராட்டத்தின் போது 42 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீது போடப்பட்ட வழக்குகளையும் கலைஞர் ரத்து செய்தார்.

அதன்பிறகு 1996-ல் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்த போது, இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 21 வன்னியர் குடும்பங் களுக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி அளித்தார். இட ஒதுக்கீடு போராட்டத்தில் பங்கேற்றவர்களைத் தியாகிகளாக அங்கீகரித்து, அவர்களின் குடும்பங் களுக்கு மாதந்தோறும் பென்ஷனும் கொடுத்தார் கலைஞர். இன்றுவரை அந்தக் குடும்பங்கள் பென்ஷன் வாங்கி வருகின்றன. இன்று அவரது புதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அந்த இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிரிழந்த 21 பேருக்கு மணிமண்டபம் கட்டியிருக்கிறார். இடையில் அதி. மு.க. என்ன செய்தது? என்பது அன்புமணிக்கே வெளிச்சம்.

**சமூக நீதியை தூக்கிப் பிடிக்கும் தி.மு.க.வின் கொள்கை மாறாது!**

கட்சிக்கு தலைவர்கள் மாறலாம். தமிழ்நாட்டின் முதல்வர் நாற்காலியில் முதலமைச்சர்கள் மாறலாம். ஆனால், சமூக நீதியைத் தூக்கிப் பிடிக்கும் தி.மு.க.வின் கொள்கைகள் மாறவில்லை. அது மேலும் மெருகூட்டப்பட்டுக் கொண்டேதான் இருக்கும் என்பதற்குச் சாட்சிதான் இன்று திறக்கப்பட்ட 21 சமூகநீதிப்



போராளிகள் மணிமண்டபம்.

தந்தை ராமதாஸோடு மல்லுக் கட்டிக் கொண்டிருக்கும் அன்புமணிக்கு வன்னியர்களுக்கு தி.மு.க. செய்தது என்ன? என்பதெல்லாம் தெரியப் போவதில்லை. அதற்காக வரலாற்றை யாரும் மாற்றி எழுதி விட முடியாது.

- தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு காவல்துறை இயக்குநராக முதன் முதலில் ராஜ்மோகன் என்ற வன்னியரை நியமித்தது தி.மு.க. அரசு.
- வன்னியச் சமுதாயத் தலைவர் ராமசாமி படையாச்சியாருக்கு சென்னை கிண்டியில் சிலை அமைத்தது கலைஞர் அரசு.
- முதன் முதலில் வன்னியர் சமுகத்தைச் சேர்ந்த வெங்கட்ராமனை மத்திய கேபினட் அமைச்சராக்கியது தி.மு.க.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக ஐ.ஏ.எஸ் அதிகாரி காசி விஸ்வநாதனை நியமித்தது தி.மு.க. ஆட்சி.
- சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த பொற்கோ நியமிக்கப்பட்டார்.
- வன்னியர் சொத்துக்களை பாதுகாக்க தி.மு.க. ஆட்சியில் தான், வன்னியர் நல வாரியம் அமைக்கப்பட்டது.
- மாநிலத் தேர்தல் ஆணையராக சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ், நியமிக்கப்பட்டார்.

இவை எல்லாவற்றையும் தைலாபுரத்தில் உள்ள பா.ம.க. அரசியல் பயிலரங்கத்தில் எழுதி ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள் அன்புமணி.

**அ.தி.மு.க. ஆட்சியின் போது அன்புமணி எங்கிருந்தார்?**

இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்த தியாகிகளுக்கு மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பத்தாண்டு ஆட்சியில் இருந்த ஜெயலலிதா, பன்னீர் செல்வம், பழனிசாமி ஆகியோர் கண்டு கொள்ளவே இல்லை. அப்போதெல்லாம் அன்புமணி எங்கே இருந்தார்? ஏன் வாய் திறக்கவில்லை?

தியாகிகளுக்கு மணிமண்டபம் கட்டும் வாக்குறுதி வெளிப்பட்டதே 2019-ல் நடந்த விக்கிர வாண்டி இடைத் தேர்தலில்தான். அந்த விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் இட ஒதுக்கீடு தியாகிகளுக்கு மணி மண்டபம் அமைக்கப்படும் என மு.க.ஸ்டாலின் அவர்கள் வாக்குறுதி கொடுத்தும் தி.மு.க. தோற்றது. ஆனாலும் இரண்டு ஆண்டுகள் கழித்து ஆட்சிக்கு வந்த பிறகு அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறது. அப்போது விக்கிரவாண்டியில் ஜெயித்த அதி.மு.க.விடம் அந்த கோரிக்கையை நிறைவேற்றக் கூடத் திராணி இல்லாமல் அவர்களிடம் மண்டியிட்டுக் கிடந்தது பா.ம.க.. அந்த நேரத்தில் ராமதாஸ் என்ன சொன்னார் தெரியுமா? 'விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப் பட்டவுடன், கூட்டணி தர்மத்தை மதித்து, அதி.மு.க.வுக்கு பா.ம.க. ஆதரவு அளித்தது. இடைத்தேர்தலில் அதி. மு.க. வெற்றி பெற்றால் அத்தொகுதிக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்கும்? என்பதுதான் பா.ம.க. பிரசாரத்தின் அடிப்படையாக இருந்தது' என்றார் ராமதாஸ். விக்கிரவாண்டியில் வெற்றி பெற்ற பிறகு அன்றைய முதல்வர் பழனிசாமி வாக்குறுதியை நிறைவேற்றினாரா... மணிமண்டபம் அமைத்தாரா? பழனிசாமி அரசுக்கு அன்றைக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்த ராமதாஸும் அன்புமணியும் வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை? எனக் கேட்கத் திராணி இருந்ததா?

**விக்கிரவாண்டியில் நயவஞ்சகன் யார் என்றுமக்கள் காட்டிய அடையாளம்!**

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், 'போர்த்தொழில் புரியும் மக்கள் வியக்கத்தக்க வீரனுக்குத்தான் மகுடம் சூட்டுவார்கள், நயவஞ்சகனை நெருங்கக் கூட விடமாட்டார்கள். விக்கிரவாண்டி தேர்தல் களத்தில் வீரன் யார்? நயவஞ்சகர்கள் யார்? என்பதை அங்குள்ள மக்கள் நன்றாக அறிந்திருந்ததால்தான் இப்படி ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்' எனச் சொன்னார்.

2021 சட்டசபைத் தேர்தலில் தளபதி ஸ்டாலின் எனும் வீரனுக்குத்தான் மக்கள் மகுடம் சூட்டித் தீர்ப்பு வழங்கினார்கள். நயவஞ்சகன் யார்? என்பதையும் அடையாளம் காட்டினார்கள்.

"வன்னியர் இட ஒதுக்கீடு ஏன் தேவை என்பது எம்.ஜி.ஆருக்கு தெரியாமல் இருந்தது. மருத்துவர் ராமதாஸ் எடுத்துக் கூறிய போது எம்.ஜி.ஆர். புரிந்து கொண்டார். எம்.ஜி.ஆர். ஆட்சியில் வன்னியருக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு கொடுக்க கோப்புகள் தயாராயின" என வடிகட்டிய பொய்யை சொல்லியிருக்கிறார் அன்புமணி.

அன்புமணி அவர்களே உங்கள் தந்தை எழுதிய அதி.மு.க. வரலாறான கழகத்தின் கதைப் புத்தகத்தைக் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். அதில் 19-வது அத்தியாயத்திற்கு ராமதாஸ் வைத்த தலைப்பு என்ன தெரியுமா? வன்னியர் எம்.ஜி.ஆருக்கு அந்நியர்! அந்த அத்தியாயத்தில் ராமதாஸ் என்ன சொல்லியிருந்தார் தெரியுமா?

**இடஒதுக்கீட்டு கோரிக்கைக்கு கழகம் நடத்திய மாநாடுகள்!**

'இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி ஏராளமான மாநாடுகள், போராட்டங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவை நடத்தப்பட்ட போதிலும், அது குறித்து பேச்சு நடத்துவதற்குக் கூட எம்.ஜி.ஆர் அரசு முன்வரவில்லை. இதைக் கண்டிக்கும் வகையில் 15.03.1984 அன்று சென்னை மெரினா கடற்கரை உழைப்பாளர் சிலை அருகில் பட்டினிப் போராட்டம் எனது தலைமையில் நடத்தப்பட்டது. அதன்பிறகும் எம்.ஜி.ஆர் தலைமை யிலான அரசுக்கு இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் நியாயம் புரியவில்லை. 1980-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை முதலமைச்சர் எம்.ஜி.ஆரை சந்திக்கத் தொடர் முயற்சிகள் மேற்கொண்டேன். ஆனால், அதனால் எந்த பயனும் ஏற்படவில்லை.

ஆனால், அந்த நேரத்தில் ஒரு நடிகையின் கணவர் இறந்து விட்டதற்காக அண்டை மாநிலத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினார். ஒரு நடிகரின் தாயாரின் மணி விழாவில் கலந்து கொண்டார்.

ஒரு நடிகரின் திருமண விழாவில் பங்கேற்கவும், ஒரு நடிகரின் சொந்தப் படத்தைத் தொடங்கி வைத்து வாழ்த்தவும், ஒரு நடிகையின் மகன் பூணூல் திருமணத்தில் பங்கேற்கவும், ஒரு நடிகரின் தங்கைகள் திருமணத்தில் பங்கேற்பதற்காகக் கோவை செல்லவும் எம்.ஜி.ஆருக்கு நேரம் இருந்தது. ஆனால், தமிழகத்தின் பெரும்பான்மை மக்களின் சமூக நீதிக் கோரிக்கையைக் காது கொடுத்துக் கேட்க நேரம் இல்லை' என ராமதாஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

ராமதாஸ் எழுதிய கழகத்தின் கதையைப் படித்துவிட்டு அன்புமணி, 'பா.ம.க. குழப்பத்தின் கதை'யை எழுதலாம்!

இவ்வாறு அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

---

**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.**

# இளைஞரணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

*கடலூர், ஜன 30 -*

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர்அணிக்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் ,கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எம்.ஆர் .கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள் வருமாறு:



முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தல்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணிக்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக இளைஞர்அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம். வருகின்ற 04.02.2025, செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணி அளவில், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர , ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட மாநகர இளைஞர்அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் புதியதாக நியமிக்கபட்டுள்ள ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க கமல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில், மாநில ஆதிதிராவிட நலக்குழு இணைச் செயலாளர் வி.பி.இராஜன், தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இளையகோபால் ஆகியோர் கலந்து கொண்டு மொழிப்போர்த் தியாகி மூங்கில்பாடி ரெங்கராஜ்க்கு மரியாதை செய்து, தமிழ் மொழியின் முக்கியத்துவம் குறித்தும் அதற்காக வீர மரணம் அடைந்தவர்கள் வரலாறு குறித்தும் பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் குன்னம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சித்தார்த்தன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், கிருஷ்ணா, தமிழ் வேந்தன், இளையராஜா உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், உறுப்பினர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.